**<u>2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,</u>**
**<u>திருவள்ளூர் @ பூந்தமல்லி</u>**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் திங்கட்கிழமை**

**<u>எல்.ஏ.ஓ.பி எண்.277/2004</u>**

**<u>CNR. No. TNTR08-000012-2004</u>**

1. திரு. முத்து (இறந்தவர்)

2. திரு. மஸ்தான் (இறந்தவர்)

3. திருமதி. கணவல்லி

4. தேவகி (இறந்தவர்)

5. ராஜேந்திரன்

6. உஷா

7. கவிதா

8. விஜயகுமார்

9. பெருமாள்

10. வெண்ணிலா (4 முதல் 10 வரையான கோருநர்கள் இறந்த முத்துவின் சட்டபூர்வ வாரிசுகள் ஆவர்)

11. ரமணி

12. மாரியப்பன்

13. சுதா

14. பிரபு

15. சிவா (11 முதல் 15 வரையான கோருநர்கள் இறந்த மஸ்தானின் சட்டபூர்வ வாரிசுகள் ஆவர்)

..மனுதாரர்கள் / கோரிக்கையாளர்கள்

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.09 21:30:39 +0530

எதிர்

சிறப்பு வட்டாட்சியர், நிலம் கையகப்படுத்தல்,

யூனிட்–I , T.N.H.B. திட்டங்கள்,

நந்தனம், சென்னை – 35.

...எதிர்மனுதாரர் /பரிந்துரை செய்யும் அதிகாரி

இந்த மனுவானது 12.03.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/ கோரிக்கையாளர்கள் தரப்பில் திரு. R. சசிகுமார் மற்றும் V. கயல்விழி, ஆகியோர் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / பரிந்துரை செய்யும் அதிகாரி தரப்பில் கூடுதல் அரசு வழக்குரைஞர் திரு.ஜெ.பிராங்க்ளின் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>உத்தரவு</u>

இந்த மனு மனுதாரர்கள் / கோரிக்கையாளர்கள் தரப்பில் பூந்தமல்லி வட்டம், குத்தாம்பாக்கம் கிராமத்தில், சர்வே எண்.654/2–ல் உள்ள 0.05.0 ஹெக்டேர் மற்றும் சர்வே எண்.654/3–ல் உள்ள 0.10.5 ஹெக்டேர் நிலத்தை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் செயற்கைக்கோள் நகரம் அமைக்கும் திட்டத்திற்காக நிறைவேற்றாணை எண்.1/2003, நாள் தேதி: 10.02.2003–ன் படி நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் பிரிவு 30 மற்றும் 31(2)ன் கீழ் கையகப்படுத்தப்பட்ட சொத்தின் மீதான உரிமையை அறிவிக்க வேண்டும் என்றும், கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு

G
BHUVANESWARI

Digitally signed
by G
BHUVANESWARI
Date: 2026.04.09
21:30:45 +0530

உயர்த்தப்பட்ட இழப்பீடு வழங்கவும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள்/கோரிக்கையாளர்கள் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:-**

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், குத்தாம்பாக்கம் கிராமத்தில், சர்வே எண்.654/2-ல் உள்ள 0.05.0 ஹெக்டேர் மற்றும் சர்வே எண்.654/3-ல் உள்ள 0.10.5 ஹெக்டேர் நிலம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் செயற்கைக்கோள் நகரம் அமைக்கும் திட்டத்திற்காக தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டது. இந்த நிலங்கள் விவசாயத் தன்மை கொண்டவையாகவும், மனுதாரர்கள் குடும்பத்தின் ஒரே வாழ்வாதாரமாகவும் இருந்தன, மேலும் இந்தக் கையகப்படுத்தல் அவர்களுக்கு இழப்பு, சேதம் மற்றும் மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

மனுதாரர்களின் கூற்றுப்படி, இந்தச் சொத்து 20.04.1972 அன்று பச்சைவண்ண நாயக்கரால் ராமானுஜம் நாயக்கருக்கு விற்கப்பட்டது. அவர் 23.06.1984 அன்று அதை வைஸ்ராய்க்கு விற்றார். வைஸ்ராய், 26.06.1989 அன்று அந்தச் சொத்தை 1 முதல் 3 மனுதாரர்களுக்கு விற்றார். அன்றிலிருந்து மனுதாரர்கள் அந்தச் சொத்தை முழுமையாக வசமும் அனுபவமும் கொண்டுள்ளனர், மேலும் அவர்களின் பெயரிலேயே உரிமையும் உள்ளது. 2004-ல் எதிர்மனுதாரர் நிலம் கையகப்படுத்துதல் நடவடிக்கைகளைத் தொடங்கி அறிவிப்பு அனுப்பினார். மனுதாரர்கள் ஆட்சேபனைகளை எழுப்பி, உயர்நீதிமன்றத்தில் W.P. எண்.3181/2012 தாக்கல் செய்தனர். தொடர்புடைய ஆவணங்களை ஆய்வு செய்தபோது, அறிவிப்பு தவறுதலாக அவர்களின் முந்தைய விற்பனையாளரான

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.09 21:30:48 +0530

வைஸ்ராய்க்கு அனுப்பப்பட்டிருப்பதையும், அவரது வாரிசுகள் சட்டவிரோதமாக இழப்பீட்டைக் கோர முயற்சித்ததையும் கண்டறிந்தனர். மனுதாரர்கள் மனுக்களைச் சமர்ப்பித்தனர், மேலும் சரிபார்ப்புக்குப் பின்னர், நீதிமன்றத்திலிருந்து உரிமை அறிவிப்புப் பத்திரத்தைப் பெறுமாறு பணிக்கப்பட்டனர். இதன் காரணமாகவே தற்போதைய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இழப்பீட்டு உயர்வுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட LAOP, மனுதாரர்கள் ஆஜராகாத காரணத்தால் 25.11.2010 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. இந்தத் தள்ளுபடி குறித்து மனுதாரர்களுக்குத் தெரியாது. 09.10.2017 அன்று நீதிமன்றப் பதிவேடுகளைப் பார்வையிட்டபோதுதான் அது தெரியவந்தது. அதன்பின்னர், அவர்கள் மீட்டெடுப்பு மனுவையும், தாமதத்தைப் பொருட்படுத்தும் மனுவையும் தாக்கல் செய்தனர். இது சட்டப்பூர்வ உதவி ஆணையத்திற்கு ரூ.3,000/- செலுத்தும் நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்பட்டது, மேலும் அந்த நிபந்தனையும் முறையாக நிறைவேற்றப்பட்டது. அதன்பின்னர், விசாரணைக்காக வழக்கு பட்டியலிடப்பட்டது. மேலும் மனுதாரர்கள் தங்களது உரிமையை நிரூபிக்கும் தொடர்புடைய ஆவணங்களைத் தாக்கல் செய்துள்ளனர். எனவே, மனுதாரர்களின் சொத்தின் மீதான உரிமையை அறிவிக்க வேண்டும் மற்றும் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு உயர்த்தப்பட்ட இழப்பீடு வழங்க வேண்டும்.

**3.** எதிர்மனுதாரர் / பரிந்துரை செய்யும் அதிகாரி தரப்பில் எதிருரை ஏதும் தாக்கல் செய்யவில்லை.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.09 21:30:52 +0530

4. <u>தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>:–

இவ்வழக்கில் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

**5.** மனுதாரர்கள் தரப்பில் 5ம் மனுதாரர் திரு. ராஜேந்திரன் என்பவர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் R.செந்தாமரைச் செல்வி, சிறப்பு வட்டாட்சியர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எந்தவொரு சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>பிரச்சனை:–</u>

இருதரப்பு வாதங்களையும் பொருத்து வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், குத்தாம்பாக்கம் கிராமத்தில், சர்வே எண்.654/2–ல் உள்ள 0.05.0 ஹெக்டேர் மற்றும் சர்வே எண்.654/3–ல் உள்ள 0.10.5 ஹெக்டேர் நிலம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் செயற்கைக்கோள் நகரம் அமைக்கும் திட்டத்திற்காக தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டது. இந்த நிலங்கள் விவசாயத் தன்மை கொண்டவையாகவும், மனுதாரர்கள் குடும்பத்தின் ஒரே வாழ்வாதாரமாகவும் இருந்தன, மேலும் இந்தக் கையகப்படுத்தல் அவர்களுக்கு இழப்பு, சேதம் மற்றும் மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. மனுதாரர்களின் கூற்றுப்படி, இந்தச் சொத்து 20.04.1972 அன்று பச்சைவண்ண நாயக்கரால் ராமானுஜம் நாயக்கருக்கு விற்கப்பட்டது. அவர் 23.06.1984 அன்று அதை வைஸ்ராய்க்கு விற்றார். வைஸ்ராய், 26.06.1989 அன்று அந்தச் சொத்தை

G
BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.09 21:30:56 +0530

1 முதல் 3 மனுதாரர்களுக்கு விற்றார். அன்றிலிருந்து மனுதாரர்கள் அந்தச் சொத்தை முழுமையாக வசமும் அனுபவமும் கொண்டுள்ளனர், மேலும் அவர்களின் பெயரிலேயே உரிமையும் உள்ளது. 2004–ல் எதிர்மனுதாரர் நிலம் கையகப்படுத்துதல் நடவடிக்கைகளைத் தொடங்கி அறிவிப்பு அனுப்பினார். மனுதாரர்கள் ஆட்சேபனைகளை எழுப்பி, உயர் நீதிமன்றத்தில் W.P. எண்.3181/2012 தாக்கல் செய்தனர். தொடர்புடைய ஆவணங்களை ஆய்வு செய்தபோது, அறிவிப்பு தவறுதலாக அவர்களின் முந்தைய விற்பனையாளரான வைஸ்ராய்க்கு அனுப்பப்பட்டிருப்பதையும், அவரது வாரிசுகள் சட்டவிரோதமாக இழப்பீட்டைக் கோர முயற்சித்ததையும் கண்டறிந்தனர். மனுதாரர்கள் மனுக்களைச் சமர்ப்பித்தனர், மேலும் சரிபார்ப்புக்குப் பின்னர், நீதிமன்றத்திலிருந்து உரிமை அறிவிப்புப் பத்திரத்தைப் பெறுமாறு பணிக்கப்பட்டனர். இதன் காரணமாகவே தற்போதைய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இழப்பீட்டு உயர்வுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட LAOP, மனுதாரர்கள் ஆஜராகாத காரணத்தால் 25.11.2010 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. இந்தத் தள்ளுபடி குறித்து மனுதாரர்களுக்குத் தெரியாது என்றும், 09.10.2017 அன்று நீதிமன்றப் பதிவேடுகளைப் பார்வையிட்டபோதுதான் அது தெரியவந்தது. அதன்பின்னர், அவர்கள் மீட்டெடுப்பு மனுவையும், தாமதத்தைப் பொருட்படுத்தும் மனுவையும் தாக்கல் செய்தனர். இது சட்டப்பூர்வ உதவி ஆணையத்திற்கு ரூ.3,000/– செலுத்தும் நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்பட்டது, மேலும் அந்த நிபந்தனையும் முறையாக நிறைவேற்றப்பட்டது. அதன்பின்னர், விசாரணைக்காக வழக்கு பட்டியலிடப்பட்டது. மேலும் மனுதாரர்கள் தங்களது உரிமையை

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.09 21:31:01 +0530

நிரூபிக்கும் தொடர்புடைய ஆவணங்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

**7.** இவ்வழக்கு நிலுவையில் உள்ளபோது, இறந்த 1ம் மற்றும் 2ம் மனுதாரர்களின் வாரிசுகளை அசல் LAOP–இல் 4 முதல் 15 வரை முறையான தரப்பினராக இணைத்துக் கொள்ளக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு இ.ம. எண்.2/2025–ல், இந்த நீதிமன்றத்தால் 17.02.2025 அன்று அனுமதிக்கப்பட்டது. அதன்பின்னர், LAOP வழக்கில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இறந்த 1ம் மற்றும் 2ம் மனுதாரர்களின் சட்ட வாரிசுகள் 4 முதல் 15 மனுதாரர்களாக LAOP வழக்கில் சேர்க்கப்பட்டனர்.

**8.** ம.சா.1 ஆக சாட்சியமளித்த திரு. ராஜேந்திரன் என்பவர் தனது குறுக்கு விசாரணையில் "நான் இந்த மனுவை நில எடுப்பு சட்ட பிரிவு 30-கீழாக தாக்கல் செய்திருக்கின்றேனா என்றால் எனக்கு செக்ஷன் எல்லாம் தெரியாது. இந்த நில எடுப்பு வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்தில் உரிமைக்கேட்டு இவ்வழக்கைத் தாக்கல் செய்திருக்கின்றேன். இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ள தொகையை ஆட்சேபனையுடன் பெற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கின்றேன்.'' என்று தெரிவித்துள்ளார்.

**9.** மேலும் எ.ம.சா.1 ஆக R. செந்தாமரைச் செல்வி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நில எடுப்பு யூனிட் 4ன் தனி வட்டாட்சியர் தனது முதல் விசாரணையில் "மேற்கண்ட வழக்கானது குத்தம்பாக்கம் கிராமம், பூந்தமல்லி வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் புல எண்.737/1ல் 0.07.0 ஏர்ஸ் நிலம் மற்றும் புல எண். 654/2ல் 0.50.0 ஏர்ஸ் நிலம் மற்றும் புல எண்.654/3ல் 0.10.5 ஆகியவற்றை கையகப்படுத்தியதற்காக அவார்டு எண்.1/2003, நாள் 10.02.2003ன் படி புல எண்.737/1ல் 0.07.0 ஏர்ஸ்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.09 21:31:05 +0530

நிலத்திற்கு மொத்தம் ரூ.21,624/- ம், புல எண்.654/2ல் 0.50.0 ஏர்ஸ் நிலம் மற்றும் புல எண். 654/3ல் 0.10.5 ஏர்ஸ் நிலத்திற்கு சேர்த்து மொத்தமாக ரூ.1,86,897/- ம் இழப்பீடாக வழங்கப்பட்டது. அதன் பின் கோருனர்களுக்கு இடையேயான உரிமை பிரச்சனையை தீர்வு காணும் பொருட்டு நில கையகப்படுத்தும் சட்ட பிரிவு 30, 31(2)ன் படி இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. இழப்பீட்டு தொகையும் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அவர் தனது குறுக்கு விசாரணையில் " கோருனர்களுக்கு இடையே உரிமை மூல பிரச்சனை இருந்ததால் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. விசாரணை சமயத்தில் உரிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. நிலம் கையகப்படுத்தும் போது உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்புவோம் என்றால் பட்டா யார் பெயரில் உள்ளதோ அவர்களுக்கு அறிவிப்பு அனுப்புவோம். மேலும் இந்த கோரிக்கை மனு தொடர்பாக சர்வே எண்.737/1ல் 0.07.0 ஹெக்டேர் நிலம் மற்றும் புல எண்.654/2ல் 0.50.0 மற்றும் 654/3ல் 0.10.5 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டது அப்போது அதன் உரிமையாளர்கள் மற்றும் நலன் சார்ந்தோர் என பக்தவச்சலம், முத்து, மஸ்தான் மற்றும் கெனவள்ளி ஆகியோருக்கு பிரிவு 12(2)ன் படி 30 நாட்கள் கால அவசாகம் கொடுத்து அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது" என்றும் "நான் ஆவணங்களின் படி தான் சாட்சியம் அளிக்கிறேன். அந்த சமயத்தில் அவர்கள் ஆஜராகவில்லை. நீதிமன்றத்தில் தொகையை வைப்பீடு செய்த போது இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது" என்றும் தெரிவித்துள்ளார்.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.09 21:31:09 +0530

**10.** மனுதாரர்கள் தரப்பு பொருண்மைகளுக்கு ஆதரவாக 20.04.1972 தேதியிட்ட பச்சைவண்ண நாயக்கர் ராமானுஜ நாயக்கருக்கு எழுதிகொடுத்த கிரயப் பத்திரத்தின் நகல் ம.சா.ஆ.1 ஆகவும், 23.06.1984 தேதியிட்ட ராமானுஜ நாயக்கர் வைஸ்ராய்க்கு எழுதிகொடுத்த கிரயப் பத்திரத்தின் நகல் ம.சா.ஆ.2 ஆகவும், 26.06.1989 வைஸ்ராய் என்பவர் முத்து, மஸ்தான் மற்றும் கனவள்ளி ஆகிய மூவருக்கும் எழுதிகொடுத்த கிரயப் பத்திரத்தின் நகல் ம.சா.ஆ.3 ஆகவும், முத்து, மஸ்தான் மற்றும் கனவள்ளி ஆகிய மூவர் பெயரில் உள்ள பட்டா எண்.821ன் நகல் ம.சா.ஆ.4 ஆகவும், 07.01.2004 தேதியிட்ட நில எடுப்பு அலுவலரின் அறிவிப்பின் நகல் ம.சா.ஆ.5 ஆகவும், 24.07.2012 தேதியிட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அனுப்பிய கடிதத்தின் நகல் ம.சா.ஆ.6 ஆகவும், 26.07.2013 தேதியிட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1வது மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் ம.சா.ஆ.7 ஆகவும், 26.07.2013 தேதியிட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 2வது மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் ம.சா.ஆ.8 ஆகவும், 26.07.2013 தேதியிட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 3வது மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் ம.சா.ஆ.9 ஆகவும், 25.11.2013 அன்று 1 முதல் 3 மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் ம.சா.ஆ.10 ஆகவும், 1ம் மனுதாரரின் இறப்பு சான்றிதழின் நகல் ம.சா.ஆ.11 ஆகவும், 1ம் மனுதாரரின் வாரிசு சான்றிதழின் நகல் ம.சா.ஆ.12 ஆகவும், 2ம் மனுதாரரின் இறப்பு சான்றிதழின் நகல் ம.சா.ஆ.13 ஆகவும், 2ம் மனுதாரரின் வாரிசு சான்றிதழின் நகல் ம.சா.ஆ.14 ஆகவும் மற்றும் 4ம் மனுதாரரின் இறப்பு சான்றிதழின் நகல் ம.சா.ஆ.15 குறியீடு

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.09 21:31:14 +0530

செய்யப்பட்டுள்ளது.

**11.** கோரிக்கையாளர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.1 முதல் 15 மூலம் 3, 5 முதல் 15 வரையிலான கோரிக்கையாளர்கள் தான் கையகப்படுத்தப்பட்ட சொத்தின் உரிமையாளர்கள் என்பது உறுதியூட்டப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட விரிவான பரிசீலனையின் அடிப்படையில் LAOP 277 of 2004–ன் கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையை மனுதாரர்கள் 3 மற்றும் 5 முதல் 15 ஆகியோர் பெறத்தக்கவர்கள் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவில், மனுதாரர்கள் 3 மற்றும் 5 முதல் 15 வரையிலானோர், நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையை பெறத்தக்கவர்கள் என்று உத்தரவிடப்பட்டு இந்த நில எடுப்பு அசல் மனு முடிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.09 21:31:19 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

<u>**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :**</u>

1. ம.சா.1 – திரு. ராஜேந்திரன்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.09 21:31:23 +0530

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | – | 20.04.1972 தேதியிட்ட பச்சைவண்ண நாயக்கர் ராமானுஜ நாயக்கருக்கு எழுதிகொடுத்த கிரயப் பத்திரத்தின் நகல் |
| ம.சா.ஆ.2 | – | 23.06.1984 தேதியிட்ட ராமானுஜ நாயக்கர் வைஸ்ராய்க்கு எழுதிகொடுத்த கிரயப் பத்திரத்தின் நகல் |
| ம.சா.ஆ.3 | – | 26.06.1989 வைஸ்ராய் என்பவர் முத்து, மஸ்தான் மற்றும் கனவள்ளி ஆகிய மூவருக்கும் எழுதிகொடுத்த கிரயப் பத்திரத்தின் நகல் |
| ம.சா.ஆ.4 | – | முத்து, மஸ்தான் மற்றும் கனவள்ளி ஆகிய மூவர் பெயரில் உள்ள பட்டா எண்.821ன் நகல் |
| ம.சா.ஆ.5 | – | 07.01.2004 தேதியிட்ட நில எடுப்பு அலுவலரின் அறிவிப்பின் நகல் |
| ம.சா.ஆ.6 | – | 24.07.2012 தேதியிட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அனுப்பிய கடிதத்தின் நகல் |
| ம.சா.ஆ.7 | – | 26.07.2013 தேதியிட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1வது மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் |
| ம.சா.ஆ.8 | – | 26.07.2013 தேதியிட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 2 வது மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் |
| ம.சா.ஆ.9 | – | 26.07.2013 தேதியிட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 3 வது மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் |
| ம.சா.ஆ.10 | – | 25.11.2013 அன்று 1 முதல் 3 மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் |
| ம.சா.ஆ.11 | – | 1ம் மனுதாரரின் இறப்பு சான்றிதழின் நகல் |
| ம.சா.ஆ.12 | – | 1ம் மனுதாரரின் வாரிசு சான்றிதழின் நகல் |
| ம.சா.ஆ.13 | – | 2ம் மனுதாரரின் இறப்பு சான்றிதழின் நகல் |
| ம.சா.ஆ.14 | – | 2ம் மனுதாரரின் வாரிசு சான்றிதழின் நகல் |
| ம.சா.ஆ.15 | – | 4ம் மனுதாரரின் இறப்பு சான்றிதழின் நகல் |

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.09 21:31:35 +0530

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :</u>**

எ.ம.சா.– 1 – R. செந்தாமரைச் செல்வி

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை</u>**

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.09 21:31:40 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**வரைவு/தெளிவு உத்தரவு**
**<u>எல்.ஏ.ஓ.பி எண்.277/2004</u>**
**நாள் 30.01.2026**
**2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**